# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 மாசி 15 செவ்வாய்க்கிழமை (27.02.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 94


# திருமலையில் ஆயிரம் குடும்பங்கள் தமது சொந்தக் கிராமங்களில் மீளக்குடியமர முடியாத நிலை

## நகர அபிவிருத்தி என்ற போர்வையில் தமிழர்களை வெளியேற்றும் திட்டமா?

திருகோணமலை, பெப்ரவரி 27

இராணுவ மோதல்களால் இடம்பெயர்ந்த திருகோணமலை நகரத்தைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ்க் குடும்பங்கள் தமது சொந்தக் கிராமங்களில் மீளக் குடியமர முடியாத இக்கட்டான நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. நகர அபிவிருத்தித் திட்டம் என்ற போர்வையில் அரசாங்கம் மேற்கொண்டுள்ள முடிவினால் அவர்கள் தாம் முன்னர் வாழ்ந்த சொந்த இடங்களில் மீளக் குடியமர முடியாத ஆபத்து உருவாகியுள்ளது.

(04ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவிடமிருந்து இலங்கைக்குப் போர்க்கப்பல்

இலங்கைக்கு மற்றொரு போர்க்கப்பலை இந்தியா வழங்கவுள்ளது.

'வராக' என்ற போர்க்கப்பல் நன்கொடையாகவோ அல்லது குத்தகை அடிப்படையிலோ வழங்கப்படும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கு முன்னர் 2000 ஆம் ஆண்டில் 'சயூரா' என்ற போர்க்கப்பலை இலங்கை இந்தியாவிடமிருந்து வாங்கியது.

இந்தியா இப்போது வழங்கவிருக்கும் 'வராக' கப்பலுடன் இலங்கைக்கு மூன்று ஆழ்கடல் போர்க் கப்பல்கள் கைவசம் சேர்கின்றன. 'கரேனியல்' என்ற போர்க்கப்பல் ஒன்றை அமெரிக்கா சென்றவருடம் அன்பளிப்பாக வழங்கியிருந்தது. (அ)

## கடற்படை சூட்டதில் தமிழக மீனவர் பலி

நாகை மாவட்டம், கோடியக்கரையிலுள்ள அக்கரைப்பேட்டை கிராமத்தில் இருந்து தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் அந்த இடத்திலேயே பலியாகினார். மூவர் காயமடைந்தனர். கரியபெருமாள் என்ற மீனவரே உயிரிழந்தவராவார். காயமடைந்த மீனவர்கள் நாகை மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (அ-1)

## தெல்லிப்பழை புனர்வாழ்வு நிலையத்தை இயக்குவதற்குப் படைத்தரப்பில் இணக்கம்

யாழ்ப்பாணம், பெப்.27

தெல்லிப்பழையில் புனர்வாழ்வு நிலையத்தை இயக்குவதற்கு பாதுகாப்புத்தரப்பினர் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

யாழ்.படைத்தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜாவுக்கு இது குறித்து நேற்று அறிவித்தார்.

உயிர் அச்சுறுத்தல் காரணமாக தஞ்சம் அடைந்தவர்களை தெல்லிப்பழையில் உள்ள புனர்வாழ்வு நிலையத்தில் தங்க வைத்து அதனை இயக்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தற்போதுள்ள சூழ்நிலையில் இந்த நிலையத்துக்கு பாதுகாப்பு வழங்க முடியாதுள்ளது என யாழ்.படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி யாழ்.நீதிமன்றத்துக்கு அறிவித்திருந்தார்.

இந்த விடயம் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது. இது தொடர்பாக அவர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருடன் பேச்சு நடத்தினார்.

அதனைத் தொடர்ந்து தெல்லிப்பழையில் புனர்வாழ்வு நிலையத்தை இயக்குவதற்கு படைத்தரப்பு இணங்கியுள்ளது.

இந்த நிலையத்துக்கு பொறுப்பாக படைத்தரப்போ, பொலீஸ்தரப்போ சம்பந்தப்படாத சிவில் அதிகாரி ஒருவரை நியமிக்க தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறியவந்தது. (அ-1)

## மகஸீன் சிறைக்கைதிகளின் உண்ணாவிரதம் நிறுத்தம்

கொழும்பு, பெப்.27

புதிய மகஸின் சிறைச்சாலையில் கடந்த ஐந்துதினங்களாக சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் நேற்றுத் தமது உண்ணாவிரதத்தை முடித்துக்கொண்டனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வழங்கிய உறுதிமொழியை அடுத்தே அவர்கள் தமது உண்ணாவிரதத்தைக் கைவிட்டனர்.

கூட்டமைப்பு எம்.பிக்களான சந்திரநேரு சந்திரகாந்தன், சிவநாதன் கிஷோர், வணபிதா கோபட் ஆகியோர் நீதியமைச்சர் டிலான் பெரேராவை சிறைச்சாலைக்கு அழைத்துவந்து தமது கோரிக்கைகளை நிறைவேற்றித் தருவதாக உறுதியளித்ததைத் தொடர்ந்தே உண்ணாவிரதம் கைவிடப்பட்டது.

வழக்குவிசாரணைகளும் இன்றி, பிணையுமின்றி விடுதலை செய்யப்படாமல் 2003ஆம் ஆண்டு முதல் தடுத்து வைக்கப்பட்டிருந்த 21தமிழ் அரசியல் கைதிகள் மூன்று நிபந்தனைகளை வைத்து அவற்றை நிறைவேற்றுவதாக நீதி அமைச்சர் டிலான் பெரேரா நேரில்வந்து தனக்கு உறுதிமொழி

(04 ஆம் பக்கம் பார்க்க)

## அனைத்துக் கட்சி மாநாடு தொடர்பாக ஐ.தே.கட்சி இன்று முடிவெடுக்கும்

கொழும்பு, பெப்.27

ஐக்கிய தேசியக்கட்சி சர்வகட்சி மாநாடுகளில் கலந்துகொள்வதா இல்லையா என்ற இறுதித்தீர்மானம் இன்று எடுக்கப்படவுள்ளது. இன்று பிற்பகல் இடம்பெறவிருக்கும் கட்சியின் அரசியல் விவகாரக் குழுக்கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்படும்என்று அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

இன்று பிற்பகல் 3மணிக்கு கொழும்பு கேம்ப்ரீச் டெரஸில் உள்ள கட்சி அலுவலகத்தில் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் இக்கூட்டம் இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்தில் பல விடயங்கள் ஆராயப்படவுள்ளன. முக்கியமாக சர்வகட்சி மாநாடுகளில் எதிர்வரும் காலங்களில் ஐக்கிய தேசியக் கட்சி கலந்துகொள்ளுதல் மற்றும் அரசின் பக்கம் இணைந்து அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொண்ட அக்கட்சியின் 11 நாடாளுமன்ற உறுப்பினர்களை கட்சியிலிருந்து விலக்குவதற்கு நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட இடைக்காலத் தடை போன்ற விடயங்கள் இதில் முக்கியமாக ஆராயப்படும்.

(04 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா வங்கிக் கிளைகளில் நேற்று வெடிகுண்டுப்புரளி!

### வாடிக்கையாளர்கள் அல்லோலகல்லோலம்

வவுனியா, பெப். 27

வவுனியாவில் இயங்கும் இரண்டு அரச வங்கிகளின் கிளை அலுவலகங்களில் வெடிகுண்டு வைக்கப்பட்டிருப்பதாக வெளியான தகவலால்நேற்று அங்கு பெரும் அல்லோலகல்லோலம் ஏற்பட்டது. வங்கிகளுக்கு வந்திருந்த வாடிக்கையாளர்கள் அலறித்துடித்துக்கொண்டு ஓடத்தலைப்பட்டனர்.

இரண்டு வங்கிக் கிளைகளுக்கும் நேற்றுக்காலை 9.45 மணியளவில் அநாமதேய தொலைபேசி அழைப்புகள் கிடைத்துள்ளன. அதில் பேசிய நபர் ஒருவர் வங்கியில் குண்டு வைக்கப்பட்டிருப்பதாக மிரட்டினார். முகாமையாளர்கள் உடனடியாக அதுபற்றி வவுனியா பொலிஸாருக்கு அறிவித்தனர்.

உடனடியாகப் பொலிஸாரும் இராணுவத்தின் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினரும் விரைந்துவந்து வங்கிகளில் இருந்து ஆள்களை வெளியேற்றிவிட்டு அங்கு சல்லடைபோட்டுத் தேடுதல் நடத்தினர். எனினும் சந்தேகத்துக்கிடமான பொதிகளோ, வெடி பொருள்களோ அங்கு மீட்கப்படவில்லை.

இந்த அநாமதேய தொலைபேசி மிரட்டல் காரணமாக நேற்று வவுனியா நகரில் பெரும் பதற்றமும் பரபரப்பும் காணப்பட்டது. வங்கிகளின் பணிகளும் பாதிக்கப்பட்டன. இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்திலும் கடந்தவாரம் இதுபோன்ற வெடிகுண்டுப்புரளி ஏற்படுத்தப்பட்டது தெரிந்ததே.

ஏற்கனவே போர் பதற்றம் அதிகரித்திருக்கும் வவுனியாவில் இதுபோன்ற புரளிகளும் மக்களின் இயல்பு வாழ்வைப் பாதித்துள்ளன.

அநாமதேய தொலைபேசி அழைப்புகளை மேற்கொள்வோரைத் தேடிக் கண்டுபிடிக்குமாறு வவுனியா நீதிவான் பொலிஸாருக்கு ஏற்கனவே உத்தரவிட்டிருக்கிறார். (ஐ-164)

## மலையகத்தில் கைதுகள் அதிகரிப்பு; தொழிலாளர்களின் மத்தியில் பதற்றம்!

கொழும்பு, பெப்.27

மலையகத்தின் பல பகுதிகளிலும் தோட்டத் தொழிலாளர்கள் உட்படத் தமிழர்கள் கைதுசெய்யப்படும் சம்பவங்கள் அதிகரித்துவருகின்றன. ஏன், எதற்கு என்று தெரியாமல் பலரையும் பொலிஸார் திடீர் திடீரெனக் கைதுசெய்து கூட்டிச்செல்வதால் அங்கு தமிழர்கள் மத்தியில் பதற்றம் உருவாகியுள்ளது.

மலையகத்தின் தோட்டத் தொழிலாளர்கள் வகைதொகையின்றி கைது செய்யப்படுகின்றனர். அதிகாலை வேளையில் பொலிஸ் ஜீப்புகளிலும் பஸ்களிலும் வரும் பொலிஸார் 60 வயதைக் கடந்த ஓய்வுபெற்ற தோட்டத் தொழிலாளர்களையும் கைது செய்துள்ளனர். இதனால் இப்பிரதேசத்தில் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 4 மணிக்கு பண்டாரவளை, பூனாகலை தோட்ட மேற்பிரிவுக்கு பொலிஸ் ஜீப்பிலும் பஸ்ஸிலும் வந்த பொலிஸார் அத் தோட்டத்தைச் சேர்ந்த 11தொழிலாளர்களைக் கைதுசெய்துள்ளனர்.

கைதானவர்களுள் பி.சிவலிங்கம் (வயது - 60), கே.கதிர்வேல் (வயது - 54), கே.மயில்வாகனம் (வயது - 45) ஆகியோர் ஓய்வு பெற்ற தொழிலாளர்களாவர்.

இதனால் இப்பிரதேசத்தில் தொழிலாளர்கள் மத்தியில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. அப்பாவித் தோட்டத் தொழிலாளர்கள் கைது செய்யப்படுவதின் பின்னணியில் பிரபல தொழிற்சங்கம் ஒன்றின் பிரமுகர்கள் இருந்து செயற்படுவதாக தோட்

(04 ஆம் பக்கம் பார்க்க)

## சீனாவில் ஜனாதிபதிக்கு வரவேற்பு

கொழும்பு, பெப். 27

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவரது குழுவினரும் ஆறுநாள்கள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நேற்றுக்காலை இலங்கை நேரப்படி 6. 30 மணிக்கு சீனாவின் பேஜிங் விமான நிலையத்தைச் சென்றடைந்தனர்.

ஜனாதிபதியையும் அவரது பரிவாரங்களையும் சீன அரசின் சார்பாக சீனாவின் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஷுவெய் டியான் காய் வரவேற்றார்.

ஜனாதிபதி சீன விஜயத்தின்போது முதல் நிகழ்வாக இலங்கையிலிருந்து கொண்டு செல்லப்பட்ட கண்களை சீனாவிலுள்ள செஞ்சிலுவைச் சங்கத்தினருக்கு கையளித்தார்.

இதேவேளை, பின்னவல யானைகள் சரணாலயத்தில் பிறந்த 'மி ஹார' என்ற யானைக்குட்டியை பேஜிங் மிருகக்காட்சிச் சாலைக்கு ஜனாதிபதி கையளிப்பார் என ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ - 2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 18 . 12 . 1948



உதிர்வு 30 . 01 . 2007

### சிவநாயகி சுந்தரலிங்கம் (சின்ரி)

கடந்த 30.01.2007 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி சிவநாயகி சுந்தரலிங்கம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (27.02.2007) செவ்வாய்க்கிழமை மண்கும்பான் வெள்ளைக் கடற்கரை புண்ணிய தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 01.03.2007 வியாழக்கிழமை அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். தாங்களும் வருகை தந்து அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கிறோம். அழைப்பிதழ் கிடைக்காதவர்கள் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
பொ.சுந்தரலிங்கம் (கணவர்),
சி.தவநாயகி (சகோதரி),
சு.சோதிநாயகி (சகோதரி).

71/127,புங்கன்குளம் வீதி,
யாழ்ப்பாணம். (58268)

## 12ஆம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு 22 12 1942



இறப்பு 12 02 1995

### அமரர் குப்புசாமி முருகையா

(முன்னாள் உரிமையாளர், லக்சுமி பவான், புன்னாலைக்கட்டுவன் சந்தி)

திதி : 27.02.2007

எம் இதயத்தின் ஒளியே! அன்பின் இலக்கணமே
பண்பின் திருவுருவமே பாசத்தின் நீங்காப் பிறப்பிடமே - எம்
மகத்தான தந்தையுமாய் விழுதுகளை தாங்கிநிற்கும் - எம்
வேருமாய், வழிகாட்டியுமாய் அன்பும் பாசத்துடன்
எங்களை அரவணைத்து வளர்த்த - எங்கள் அப்பாவே!
பன்னிரண்டு ஆண்டுகள் அகன்று போயிடினும் - எம்
அழுகையும் கண்ணீரும் ஆறவில்லை.
எம் உயிர் உடலுடன் உள்ளவரை - உன்
நினைவதை சுமந்து வாழ்ந்திடுவோம்
ஆறாத்துயரில் மூழ்கும் எமக்கு
ஆறுதல் சொல்ல வாராயோ.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி : மு. சரோஜினி,
மகன் : மு. ராஜேஸ்கண்ணன்,
மகள்மார்கள்.

ஊரெழு கிழக்கு,
சுன்னாகம். (58385)

## மரண அறிவித்தல்

### கார்த்திகேசு கைலாயபிள்ளை

சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு கைலாயபிள்ளை 25.02.2007 ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் கனகம்மாவின் அன்புக் கணவரும் லதா, சசிகரன், சுரிகரன், சுபாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஈஸ்வரன், சிவகௌரி, கலாதேவி ஆகியோரின் மாமனும் விதுஷன், லக்சனா, லக்ஷன், சுகேஸ், சஞ்சீவன், அனுஷன், அபினஜா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறுகின்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.
(சி/52113)

## மண்ணெண்ணெய் விநியோகம்

யாழ்.ப.நோ.கூ.சங்கத்தின் முற்றவெளி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இன்று மு.ப 9 மணி முதல் ஜனவரி, பெப்ரவரி மாதங்களுக்கான மண்ணெண்ணெய் விநியோகம் இடம்பெறவுள்ளது.

ஜே 68, ஜே 69, ஜே 71, ஜே 72, ஜே 73, ஜே 81, ஜே 82, ஜே 83 ஆகிய கிராமசேவகர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் தமக்குரிய மண்ணெண்ணையைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

* * *

கல்வியங்காடு தேவகுருநாதன் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் ஜே 106, ஜே 107, ஜே108, ஜே 109, ஜே 111, ஜே 112 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு 4லீற்றர் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகின்றது.
(202-17-111)

## தவறிவிட்டது

மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பழையைச் சேர்ந்த கார்த்திகா சிவப்பிரகாசம் என்பவருடைய தேசிய அ.அ.இல.828432443V, விசேட அ.அ.இல. 0907 003113 என்பன அடங்கிய கவர் 23.02.07 பஸ் நிலையத்திற்கும் நல்லூருக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பிரகாந் கொமினிகேசன், திருநெல்வேலிச் சந்தி என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (58457)

## தொலைந்துவிட்டது

பரராசசிங்கம் தேவகுமார் என்பவரது தேசிய அடையாள அட்டை இல. 592521911 V, விசேட அடையான அட்டை, லான்ட் மாஸ்டர் இன்சூரன்ஸ் வரிப்பத்திரம், இராணுவத்தினரின் மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம் ஆகியன நவாலிக்கும் மானிப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ப.தேவகுமார், சின்னப்பா வீதி, நவாலி கிழக்கு, மானிப்பாய் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும்.

## தவறிவிட்டது

ஊரெழு மேற்கைச் சேர்ந்த செல்வரட்ணம் குகநாதன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை 542571306V ஊரெழுவுக்கும் திருநெல்வேலிக்கும் இடையில் 23.02.2007 தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யா/பல்கலைக்கழக பரீட்சை அனுமதி கிளையில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். (58454)


## A/L Day Class

மானிடப் புவியியல்

ஆரம்பம் : 02.03.2007
(திங்கள், புதன், வெள்ளி) காலை
P.S. குமரன் B.A(Hons)
பொருளியற் கல்லூரி யாழ்ப்பாணம்.

## தினசரி விமானசேவை

கொழும்பு - யாழ்.
யாழ். - கொழும்பு
DAYA AVIATION நிறுவனத்தினால் நான்கு பேர் பயணிக்கக்கூடிய இரு வழிப்பாதை தினசரி சிறுவிமான சேவை உத்தரவாதத்துடன் நடத்தப்படுகின்றது.
ஒரு வழிப்பாதைக்கான கட்டணம் ரூபா 30,000/=
உடனடிப்பயணத்துக்கு தொடர்பு கொள்ளவும்.
தொ.பே.: 0114969116/ 0114542190
பக்ஸ்: 0114542360
மொபைல்: 0773846681

## புளூ றியன் ஹொட்டல் & ரெஸ்ரோறன்ட்



★ புரியாணி (கோழி, ஆடு, மாடு) ★ பிறைட் றைஸ்
★ சீபூட் ★ கொத்து றொட்டி ★ டெவல்

இன்னும் பல வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கேற்ற வகையில் மேலைத்தேய உணவு வகைகளும் மற்றும் தங்குமிட வசதிகள், ஓடர் உணவு வகைகள் குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ள நீங்கள் ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்.

புளூ றியன் ஹொட்டல் (Sea Side)
தும்பளை, பருத்தித்துறை.
T.P. : 021 226 3999
077 5006999
077 6529078
(சி/52100)


## வேலையற்ற பட்டதாரிகளை பதிவுசெய்தல்

26.02.2007 அன்று பதிவு செய்யத் தவறியோர் 28.02.2007 காலை 9-11 மணிவரை யாழ்.கல்வி வலயத்திற்கு அருகில் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வேலையற்ற பட்டதாரிகள் சங்கம்.
(58460)

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 17 . 05 . 1954



மறைவு 19 . 02 . 2005

### திருமதி கருணைவேல் தேவநாயகி

திதி: பூர்வ பக்க ஏகாதசி

வருடம் இரண்டாக மாண்டீர் என்று
சொல்ல மனசு மறுக்கிறது
யோசிக்க யோசிக்க நிமிஷம் கடந்தாலும் - உம்
சிரித்த முகம் தோற்றம் எம் நெஞ்சத்தை கடக்காது.

கருணைவேல் (கணவர்),
அரும்செல்வி, ஷந்திரிகா,
ஜனகன் (பிள்ளைகள்)

துவாளி வீதி, இமையாணன்,
உடுப்பிட்டி. (சி/52095)

## துயர்பகிர்வு

யாழ்.பிரதேச செயலகத்தில் நிகழ்ச்சித்திட்ட உதவியாளராக கடமையாற்றிக்கொண்டிருக்கும்
திருமதி ஜெயபூரணி ஐங்கரன்
அவர்களின் பாசமிகு தந்தை

### அமரர் செல்லையா தங்கராசா

அவர்களின் பிரிவுத் துயரில் ஆழ்ந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.
(58455)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



திருமதி
### பரமலீலா தர்மகுலசிங்கம்

தோற்றம் 24.09.1944 — மறைவு 30.01.2007

நவாலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட எங்கள் அன்புத் தாய் திருமதி பரமலீலா தர்மகுலசிங்கம் அவர்கள் 30.01.2007 செவ்வாய்க்கிழமை காலமான செய்தி கேட்டு நேரிலும், தொலைபேசி மூலமும் ஆறுதல் தெரிவித்த அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன், 01.03.2007 வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திக் கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

அரசடி வீதி, நவாலி தெற்கு,
மானிப்பாய்.

## நாளை - 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் நவாலியூர்
### திருமதி செல்வராஜா செல்வராணி (மம்மி)

## 31ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் நவாலியூர்
### கணபதிப்பிள்ளை செல்வராஜா

[கிராமத் தலைவர்(VH), கிராம அலுவலர்(G.S)]

கடந்த 29.01.2007 இல் சிவபதமடைந்த திருமதி செ.செல்வராணி அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

திரு. திருமதி செ.ரமேஷ்,
திரு. திருமதி செ.சுரேஷ்,
செ.சதீஸ்,
அஸ்வினி,
ஒசாயினி.

ஹேமா இல்லம்,
புலவர் வீதி, நவாலி வடக்கு,
நவாலி.
தொ.பே. 0094 602212676
(சி/52102)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., 222 3837, 222 9933 தொ.ந.: 222 9944

# புனைகதைகளாக வனையப்பட்ட சரித்திரத்தை சரிவர எழுதுங்கள்!

இலங்கை இனப்பிரச்சினைக்கு மூலமாக அமைந்த காரணியைப் புட்டு வைத்திருக்கின்றார் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவரான பேராசிரியர் சுச்சரித்த கம்லத்.

சிங்கள - பௌத்த பேரினவாதக் கருத்தாதிக்கம் இன்று சிங்கள தேசத்தின் தேசியச்சித்தாந்தமாக மேலாண்மை செலுத்தி வருவதற்கான அடிப்படைப் பின்புலக் காரணத்தையே அவர் அம்பலப்படுத்தி இருக்கின்றார். சிங்களத்தின் மனவமைப்பின் ஆழத்தில் அழியாத கோடுகளாகப் பொறித்து விடப்பட்டிருக்கும் வலுவான இந்தச் சிந்தனைப் போக்கே சிறுபான்மையினரை அடிமைப்படுத்தி, அடக்கி, ஒடுக்கி அவர்களின் உரிமைகளைப் பறித்து, அவர்களின் தாயகத்தை ஆக்கிரமித்துத் திமிர்கொண்டு நிற்க பெரும்பான்மை இனத்தை வழிப்படுத்தியிருக்கின்றது.

இலங்கைத்தீவின் வரலாறு திரிபுபடுத்தப்பட்டுள்ளது. புனைகதையாக அது வனையப்பெற்றுள்ளது. இந்தப் புனைகதைப் புரளிகளை உள்வாங்கிக் கொண்டுள்ள சிங்கள தேசம், அதன் அடிப்படையில் சன்னதம் கொண்டு எகிறுகிறது. அதன் விளைவே இன்றைய அவல நிலைமை.

இலங்கையின் உண்மை வரலாற்றை வெளிப்படுத்தும் வகையில் இலங்கை வரலாறு மீள எழுதப்படவேண்டும். அப்போது இலங்கைத்தீவில் ஒருமைப்பாடும், நல்லிணக்கமும் ஏற்படும் என்ற உண்மையை வெளிப்படுத்துகின்றார் பேராசிரியர் கம்லத்.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே சிங்களவர் - தமிழர் உறவு சீராகவே இருந்திருக்கின்றது என்கிறார் அவர்.

ஆக, வரலாற்றுத்திரிபு நேர்சீராக்கப்பட்டு, அதன் உண்மை நிலை இந்தத் தீவின் மக்களுக்கு உணரக்கூடிய வகையில் புகட்டப்படுமாயின் நல்லிணக்கமும், ஒத்திசைவும், ஒருமைப்பாடும் உருவாகும் என்கிறார் பேராசிரியர் கம்லத்.

கிறிஸ்துவுக்கு முந்திய காலம்வரை தொடர்ந்து செல்லும் தொன்மைமிக்க ஆழமான வேரோடல்களை இத்தீவில் தமிழ், சிங்கள இனங்கள் கொண்டுள்ளன.

வேறுபட்ட மொழிகள், பாரம்பரியங்கள், பண்பாடுகள், வேறுபட்ட நிலப்பரப்புகள், தனித்துவமான பண்பியல்புகள் ஆகியவற்றுடன் கூடிய - தொன்மைவாய்ந்த - இரு நாகரிகங்களின் வரலாற்றுத் தாயகம் இலங்கை.

1799 இல் ஆங்கிலேயக் குடியேற்ற சாம்ராஜ்ஜியம் இலங்கைத்தீவின் ஆட்சிக்கட்டுப்பாட்டை முழுவதுமாக ஆக்கிரமித்துப் பற்றிக்கொண்ட சமயம், குடியேற்ற ஆட்சியின் முதல் செயலதிபராகப் பதவியேற்ற சேர் கிளகோண், இலங்கை நிலைமை பற்றித் தமது குறிப்பேட்டில் தெளிவாகப் பதிந்து வைத்திருக்கின்றார்.

*"இரு வேறுபட்ட தேசிய இனங்கள், மிகப் புராதன காலத்திலிருந்தே தீவின் வளங்களைத் தம்மிடையே பிரித்து வைத்திருக்கின்றார்கள். வளவை நதியிலிருந்து சிலாபம் நதிவரை, அதன் தெற்கிலும் மேற்கிலும் உள்ள உள்நாட்டுப் பகுதிகளைச் சிங்களவர்கள் கொண்டிருக்க, மலபார்கள் (தமிழர்கள்) வடக்கு - கிழக்கு மாவட்டங்களைத் தமதாக்கிக் கொண்டிருக்கின்றார்கள். இந்த இரு தேசிய இனங்களும் தங்கள் சமயம், மொழி, பழக்க வழக்கங்கள் ஆகியவற்றில் முற்றாக வேறுபட்டவர்களாகக் காணப்படுகின்றார்கள்"* - என்று மிகப் பிரபல்யமான 'கிளகோண் அறிக்கை' குறிப்பேடு தெளிவுபடுத்துகின்றது.

தமிழர் தேசம், சிங்களவர் தேசம் என்று தனித்தனி இராச்சியங்களாக அடையாளப்படுத்தி, ஆளப்பட்டு வந்த - நிர்வகிக்கப்பட்டுவந்த - இரண்டு நாகரிகங்களினதும் தாயகங்கள் 1833 இல் ஆங்கிலேயக் குடியேற்ற சாம்ராஜ்ஜியத்தினால் தனது நிர்வாக வசதிக்காக ஒன்றிணைக்கப்பட்டன.

ஸ்திரமாக விளங்கிய தமிழர்களின் தாயக இருப்புப் பற்றிய வரலாறு சரிவரப் பொறித்துவிடப்படாத நிலையில், சிங்கள வரலாற்றுப் பதிவேடுகளை எழுதிய பௌத்த பிக்குகள் சரித்திரத்தைத் திரித்துவிட்டார்கள். புனைகதைகளில் அவை வனையப்பெற்று, முழு இலங்கைத்தீவுமே சிங்களத்தாயகமாகச் சித்திரிக்கப்பட்டது. தமிழர்கள் இத்தீவில் தனித் தாயகத்தையும், தனித் தேசத்துடன் கூடிய ஆட்சியமைப்பையும் கொண்டு வரலாற்றுக் காலத்துக்கு முன்பிருந்தே இங்கு வாழ்ந்து வருகின்றார்கள் என்ற உண்மை பூசி மெழுகி மூடப்பட்டது. வரலாற்று வேரோடல் காரணமாகத் தமிழர்களுக்கு இம்மண்ணில் இருந்த நியாயமான - பூர்வீகமான - பிரிக்க முடியாத - அடிப்படையான - உரிமையும், உறவும், பற்றும் இன்னோரன்ன விடயங்களும் சிங்களத்தினால் நிராகரிக்கப்படும் சூழமைவு இப்படித்தான் உருவானது.

இத்தீவு இரண்டு இனங்களின் வரலாற்றுத் தாயகங்களைக் கொண்டிருந்தபோதும், இரண்டு தாயக தேசங்களுக்கு இடையிலும் எப்போதும் நல்லுறவும் இணக்கமும் இருந்தே வந்தன என்று கூறுவதும் தவறானதுதான்.

இந்தத் தீவில் இவ்விரு தேசியங்களுக்கு இடையேயான உறவு கொந்தளிப்பான அரசியல் வரலாற்றையே கொண்டிருக்கின்றது. தமிழ், சிங்கள மன்னர்களிடையே நடந்த கொடும் போர்கள், தென்னிந்தியத் தமிழ் இராஜ்ஜியங்களின் படையெடுப்புகள், மேலாண்மையை நிறுவுவதற்காகத் தமிழ் - சிங்கள இராஜ்ஜியங்களிடையே வெடித்த கோரமான யுத்தங்கள் போன்றவை மூடிமறைக்கத்தக்கனவல்ல.

ஆனால், அவை எவையும் இலங்கைத்தீவில் தமிழர் தாயகத்துக்கும் தமிழர் தேசத்துக்கும் உள்ள வரலாற்று உரிமைகளையும், உண்மைகளையும் நிராகரிப்பதற்குக் காரணியாக அமையக்கூடியனவல்ல. மேலும் விளக்கமாகக் கூறுவதானால், ஈழத் தமிழர்களின் தாயகக் கோட்பாடு, சுயநிர்ணய உரிமை போன்ற மறுக்கப்படமுடியாத அவர்களின் பிறப்புரிமைகளை உறுதிப்படுத்தும் காரணிகளாகவும் அவை அமைகின்றன.

ஆக, பண்டைய இதிகாசங்கள் புனைந்துவிட்ட புரளிகளினால் தவறான மனவமைப்பில் சிக்கிக் கொண்டுள்ள சிங்கள தேசத்தை அதிலிருந்து மீட்டு, நியாயத்தை ஏற்பதற்கு அதனை இணங்க வைக்கவேண்டுமானால், இத்தீவில் தமிழர்களின் உரிமைகளை உறுதிப்படுத்தும் உண்மைச் சான்றுகளுக்கு அமைவாக - ஒத்திசைவாக - மெய்மைச் சரித்திரம் சரிவர எழுதப்படவேண்டும். புனைகதையாக வனையப்பட்ட வரலாறு நேர்சீர் செய்யப்படவேண்டும். திரிப்புக்கள் திருத்தப்படவேண்டும்.

# மின்விநியோகத்தைச் சீராக்க கொழும்பு அதிகாரிகள் வாக்குறுதி

யாழ்ப்பாணம், பெப்.27

குடாநாட்டில் மின்விநியோகத்தைச் சீராக மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாக மின்சார சபைத்தலைவர் டபிள்யூ.ஏ.எஸ்பெரேரா உறுதியளித்துள்ளார்.

குடாநாட்டில் மின் வெட்டுக் காரணமாக யாழ். நகரம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் உள்ள சுமார் 70ஆயிரம் பாவனையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு தடையின்றி மின்விநியோகம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அரச அதிபர் மின்சார சபைத் தலைவரிடம் கேட்டிருந்தார்.

கூல் ஏயார் நிறுவனப் பொது முகாமையாளர் செனவிரத்தினவிடம் அரச அதிபர் இக்கோரிக்கையை விடுத்தார்.

கூல் ஏயார் நிறுவனத்துக்கு தேவையான உராய்வு நீக்கி கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டு, தற்சமயம் இறக்கப்படுகின்றது என்றும் -

ஓரிரு தினங்களில் மின்வெட்டை நீக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் - மின்சார சபைத்தலைவர் அரச அதிபருக்கு தகவல் தெரிவித்துள்ளார். (அ-1)

## கரணவாயில் இலவச மருத்துவ முகாம்

வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2மணி தொடக்கம் 5மணிவரை கரணவாய் தெற்கு, மணியகாரன் தோட்டம் தமிழ் கலவன் பாடசாலையில் இலவச மருத்துவ முகாம் நடைபெறவுள்ளது. (1-202)

# வேலையற்ற பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்க வலியுறுத்து

வேலையற்ற பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குவது தொடர்பாக உரிய தரப்பினரிடம் சுட்டிக்காட்டி எடுத்துவிளக்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுவதாக யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேலையற்ற பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குவது தொடர்பான கூட்டம் நேற்று முற்பகல் 11 மணியளவில் யாழ். வலயக் கல்விப் பணிமனை அருகில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வேலையற்ற பட்டதாரிகள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகள் குறித்தும் பிரஸ்தாபிக்கப்பட்டது. கூட்டத்தில் பெரும் எண்ணிக்கையான வேலையற்ற பட்டதாரிகள் கலந்துகொண்டனர்.

இதில் 2004, 2005 மற்றும் 2006 ஆம் ஆண்டில் கற்று வெளியேறிய ஏராளமானவர்கள் பங்கேற்றனர். கூட்டத்தின் முடிவில் வேலையற்ற பட்டதாரிகளின் நலனைக் கவனிப்பதற்காக நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இதேவேளை -விரைவில் கொழும்பு கல்வி அமைச்சில் நடைபெறும் கூட்டத்திலும் மேற்படி விடயம் சம்பந்தமாகவும் கலந்துரையாட இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ-4-79)

## சங்கங்கள் ஊடாக குத்தரிசி விற்பனை கிலோ 48 ரூபாவுக்கு

கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ள குத்தரிசி - சிவப்பு நாட்டரிசி - கிலோ 48ரூபாவுக்கே விற்பனை செய்யப்படுகின்றது என்று அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

ப.நோ.கூ.சங்கங்களின் கிளைகள் ஊடாக இந்த அரிசி விற்பனை செய்யப்படும். மேற்படி குத்தரிசி கிலோ 28 ரூபாவுக்கு விற்கப்படும் என்று நேற்றுத் தவறுதலாக பிரசுரமாகிவிட்டது. அதற்காக வருந்துகிறோம். (அ-1)

# பொருள்கள் விற்பனை செய்யும்போது பற்றுச்சீட்டு வழங்கவேண்டும்

**வணிகர் சங்கம் வர்த்தகர்களுக்கு அறிவுறுத்து**

யாழ்ப்பாணம்,பெப்.27

குடாநாட்டில் உள்ள சகல வர்த்தக நிறுவனங்களும் தமது வர்த்தக ஸ்தாபனத்தின் பெயர் பொறிக்கப்பட்ட பற்றுச் சீட்டுக்களில் பொருள்களின் விலைகளையும் திகதியையும் குறிப்பிட்டு அதில் ஒப்பமிட்டு நுகர்வோருக்கு வழங்குவதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.

இவ்வாறு வர்த்தகர்களுக்கு யாழ்ப்பாணம் வணிகர் கழகம் அறிவித்தல் விடுத்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக வணிகர் கழகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தற்போது காகிதாதிகளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாகப் பற்றுச்சீட்டுப் புத்தகம் அச்சிட்டு வழங்கமுடியாத வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையத்தை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் பெயர், முகவரி குறிப்பிடப்பட்ட இறப்பர் முத்திரையை இதற்குப் பயன்படுத்த முடியும்.

நுகர்வோருக்குப் பொருள்கள் பெற்றமைக்கான பற்றுச்சீட்டை வழங்கும்போது இந்த இறப்பர் முத்திரையைப் பயன்படுத்த முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (203)

# பல்கலை. அனுமதியில் பாதிக்கப்பட்ட மாணவர்கள் ஆணைக்குழுத் தலைவருக்கு மகஜர் அனுப்ப ஏற்பாடு

யாழ்ப்பாணம், பெப்.27

இவ்வாண்டு பல்கலைக்கழக அனுமதியில் தாம் பாதிக்கப்பட்டமைக்கு நிவாரணமும் நியாயமும் வழங்கும் விதத்தில் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பொறியியல் மற்றும் மருத்துவத்துறை மாணவர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு மகஜர் ஒன்றை அனுப்பவுள்ளனர்.

தாம் பாதிக்கப்பட்டுள்ளமைக்கு உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் தமது உயர்கல்வி வாய்ப்புக்குச் சாதகமான தீர்வை மேற்கொள்ளுமாறும் அவர்கள் அந்த மகஜரில் கோரவுள்ளனர்.

இது தொடர்பாக ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று நேற்றுக் காலை யாழ். சயன்ஸ் ஹோலில் நடைபெற்றது. பல்கலைக்கழக அனுமதியில் பாதிக்கப்பட்ட பொறியியல் மற்றும் மருத்துவத் துறை மாணவர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

தாம் பாதிக்கப்பட்டமை தொடர்பாக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு மகஜர் மூலம் தெரியப்படுத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதென இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (அ-8)

# நாலரைக்கோடி ரூபா பெறுமதியான கடற்றொழில் உபகரணங்கள் வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், பெப்.27

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்களுக்கு நாலரைக்கோடி ரூபா பெறுமதியான கடற்றொழில் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

உலக விவசாய நிறுவனமும் கடற்றொழில், நீரியல்வள திணைக்களமும் இணைந்து இந்த உதவியை வழங்கும்.

திருகோணமலையில் இருந்து காங்கேசன்துறைக்கு வந்துள்ள 'இந்துருவலி' கப்பலில்எடுத்து வரப்பட்ட வலைகள் மற்றும் தொழில்சார் உபகரணங்கள் கடற்றொழில்நீரியல்வளத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட கடற்கலங்களை உடைய மீனவர்களுக்கு விரைவில் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், வேலணை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, சண்டிலிப்பாய், சுழிபுரம் ஆகிய பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மீனவர்களுக்கே இந்த உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன. மேற்குறிப்பட்ட பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்து மொத்தம் 882 கடற்றொழிலாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சுனாமியால் பாதிக்கப்படாத தொழிலாளர்களுக்கே இந்த உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன. (அ-4)

# உடுப்பிட்டியில் கடத்தப்பட்ட மாணவர்கள் நேற்றுத் திரும்பினர்

யாழ்ப்பாணம்,பெப்.27

உடுப்பிட்டிப் பகுதியில் கடந்த சனிக்கிழமை கடத்தப்பட்ட இரண்டு பாடசாலை மாணவர்களும் நேற்றுத் திங்கட்கிழமை அதிகாலை வீடு திரும்பியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலையைச் சேர்ந்த பூ.ஜெசிதரன் (வயது 15), கு.சிவரூபன் (வயது 15) ஆகியோரை தனியார் கல்விநிலையம் ஒன்றுக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பும் வழியில் காணவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் இருவரும் நேற்று அதிகாலை வீடு திரும்பியதாகப் பெற்றோர் கூறினர்.

மாணவர்கள் இருவரும் தனியார் வகுப்புக்குச் சென்றுவிட்டு வல்லை வீதியை அண்டியதாக உள்ள கோயில் ஒன்றில் நின்றுகொண்டிருந்த வேளையில் வெள்ளை வானில் வந்த இனந்தெரியாதோர் அவர்களைக் கடத்திச் சென்று பாழடைந்த வீடு ஒன்றில் வைத்து விசாரணைக்குட்படுத்தியதாகவும் -

பின்னர் ஊரடங்கு அமுலில் இருந்த நள்ளிரவுவேளை உடுப்பிட்டிப் பகுதியில் வாகனத்தில் கொண்டு வந்து இறக்கிவிடப்பட்டதாகவும் விடியும்வரை வயல் [illegible] அவர்கள் அதிகாலை வீடு திரும்பியதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ-8-115)

**குடாநாட்டின் ட்டிச் செய்திகள் — யாழ்ப்பாணம்**

## யாழ். மாநகரசபை நூலகங்கள் ஞாயிற்றுக்கிழமையிலும் இயங்கும்

யாழ்ப்பாணம், பெப்.27

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட நூலகங்கள் இனிமேல் ஞாயிற்றுக்கிழமைகளிலும் இயங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக மாநகர சபை ஆணையாளர் செ.சரவணபவ் உதயனுக்குத் தெரிவித்துள்ளார்.

ஞாயிற்றுக்கிழமைகளில் பத்திரிகைகள் வாசிக்கும் பிரிவை அடுத்த மாதம் முதலாம் திகதியிலிருந்து வாசகர்கள் பயன்படுத்த அனுமதிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

ஓகஸ்ட் மாத அசாதாரண சூழ்நிலையின் பின்னர் ஞாயிற்றுக்கிழமைகளில் நூலகங்களின் செயற்பாடு தடைப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை, யாழ்.பொது நூலகம் புதிய ஏற்பாட்டுக்குள் அடங்காது என அறியவந்தது. (அ-88)

## வங்கி ஊழியரைக் காணவில்லையாம்

யாழ்ப்பாணம்,பெப்.27

யாழ்ப்பாணத்தில் இளம் குடும்பஸ்தரும் வங்கி ஊழியருமான ஒருவர் காணாமற்போயுள்ளதாக யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் நேற்று முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

அரசடி வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கொமர்ஷல் வங்கி பாதுகாப்பு ஊழியரான விஜயரட்ணம் அகில்ராஜ் (வயது 26) என்பவர் நேற்றுமுன்தினம் தனது வீட்டிலிருந்து பிற்பகல் 2.30 மணியளவில் வங்கிக்குச் சென்றதாகவும் அதன் பின்னர் வீடு திரும்பவில்லை என்றும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (1-4)

## தென்மராட்சியில் 1,200 குடும்பங்களுக்கு இன்று நிவாரணம்

யாழ்ப்பாணம், பெப்.27

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள வறுமைக் கோட்டுக்கு கீழ்பட்ட வருமானமுடைய ஆயிரத்து 200 குடும்பங்களுக்கு இன்று நிவாரணம் வழங்கப்படும்.

சேவாலங்கா நிறுவனத்தின் அனுசரணையுடன் பிரதேச செயலகம் ஊடாக இந்த நிவாரண உதவி வழங்கப்படவுள்ளது.

கிளாலி, மிருசுவில், வரணி, கொடிகாமம், கச்சாய் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சமுர்த்தி பயனாளிகளிடையே இருந்து தெரிவு செய்யப்பட்ட ஆயிரத்து 200 குடும்பங்கள் பயன்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (1-88)

# உரவகைகள், கிருமிநாசனிகள் கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டன

யாழ்ப்பாணம்,பெப்.27

குடாநாட்டு விவசாயிகளுக்கு வழங்குவதற்கென 475 மெற்றிக் தொன் உரமும், 24 மெற்றிக்தொன் கிருமி நாசனிகளும் கமநல சேவைகள் திணைக்களத்துக்கு வந்து சேர்ந்துள்ளதாக கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் ஏ.பற்றிக் டிறஞ்சன் நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

யாழ். அரச அதிபர் கே. கணேஷ் மேற்கொண்ட முயற்சியினால் இவை எடுத்துவரப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

'ஜெனி கிளிப்பர்' என்ற கப்பலில் எடுத்துவரப்பட்ட இந்தப் பொருள்களில் கிருமிநாசனிகள் இறக்கப்பட்டு கமநல சேவைகள் திணைக்களத்தின் களஞ்சியத்துக்கு எடுத்துவரப்பட்டுள்ளதாகவும், உரம் இறக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கப்பலில் எடுத்தவரப்பட்ட பொருள்களில் 400 மெற்றிக் தொன் யூரியா உரம், 45 மெற்றிக்தொன் எம்.ஓ.பி.உரம், 30 மெற்றிக்தொன் ரி.எஸ்.பி. உரம் ஆகியனவும் கிருமிநாசனிகளில் 'செலிக் கிறோன்', 'லெனட்', 'அற்றபடறோன்', 'மோஸ்பிளான்', 'யூடோ', 'காபோ பியூறுடோன்', 'கோல்ட்', 'ரவுன்டப்' உட்பட முக்கிய மருந்துகளும் அடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவை அனைத்தும் குடாநாட்டில் உள்ள 13 கமநல சேவை நிலையங்கள் ஊடாக விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படவுள்ளது என்றும் - ஒரு பை யூரியா உரம் 2 ஆயிரத்து 750 ரூபாவாகவும் ஒரு பை எம்.ஓ.பி., ரி.எஸ்.பி. ஆகியன 2 ஆயிரத்து 500 ரூபாவாகவும், கிருமிநாசனிகள் அவற்றில் பொறிக்கப்பட்டுள்ள விலைக்கும் விற்பனை செய்யப்படவுள்ளதாக கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (அ-8)

## நாளை

மாசி- 16
புதன்கிழமை
28.02.2007
திதி: துவாதசி
பின்னிரவு : 02.29
நட்சத்திரம் : புனர்பூசம்
பிற்பகல்: 02.18
சுபநேரம் : 04.58 - 06.28
ராகுகாலம் : 12.28 - 01.58

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குற்றத்தடுப்பு பொலிஸ் அதிபரின் மைத்துனரும் கடத்தப்பட்டார்!

கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் தலைவரும் பிரதி பொலிஸ்மா அதிபருமான சரத் லூகொடயின் மைத்துனரான கோடீஸ்வர வர்த்தகர் புலேந்திரன் கடத் தப்பட்டு நான்கு தினங்கள் கடந்த நிலையிலும் எதுவிதமான தகவலும் கிடைக்கவில்லை.

பொரளையில் உள்ள மிலேனியம் கலர் லேப் உரிமையாளரான ராஜாபுலேந்திரன் கடந்த வியாழக்கிழமை இனம்தெரியாத நபர்களால் கடத்தப்பட்டார்.

சம்பவதினம் நள்ளிரவு நேரத்தில் வர்த்தக அலுவல்களைமுடித்துக்கொண்டு வர்த்தக நிறுவன முகாமையாளர் ரத்னேஸ்வரனை கிருலப்பனையில் உள்ள அவரது வீட்டில் இறக்கிவிட்டு கடவத்தையில் இருக் கும்தனது வீட்டிற்குச் செல் லும் வழியில் வெள்ளை வானில் வந்தவர்களால் அவர் கடத்தப்பட்டுள்ளார். எனினும், இதுவரை இக் கடத்தல் தொடர்பாக எதுவித தகவல்களும் கிடைக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ)


**தரம் 5 வெற்றித்தேர்வு - 5**

**கணேசலிங்கம்** அவர்களின்

**புலமைப்பரிசில் வெற்றித்தேர்வு - 5**

இன்று வெளிவருகிறது.....

**தரம் 4 முதல் O/L வரை**

2007 முதலாவது பரீட்சை வினாப்பத்திரங்கள் வெளிவந்துவிட்டன.

வருகின்ற பிரதிகள் குறைவானவை என்பதால் இன்றே பெற்றுக்கொள்ளுங்கள். கிடைக்கும் இடங்கள்.

பூபாலசிங்கம் யாழ்.நகர், துர்க்கா கன்னாகம், மொடேன் நெல்லியடி, விநாயகர் ரெலிகொம் தாவடி சந்தி, சயன்ஸ் அக்கடமி, அரியாலை, நல்லூர். நிரூ மற்ஸ் அக்கடமி சாவகச்சேரி.

மேலதிக விபரங்களுக்கு: 0773126807, 0212229016, 0212263815, 0775388471


## திருமலையில் ஆயிரம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த வருடம் இடம்பெற்ற இராணுவ மோதல்கள் காரணமாக மூதூர், ஈச்சிலம் பற்று, சேருவில் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ்க் குடும்பங்கள் இடம் பெயர்ந்துசென்று, மட்டக்களப்பு மாவட்டத்திலும் திருகோணமலையின் ஏனைய பகுதிகளிலும் அதிகளாக வாழ்ந்து வருகின் றனர்.

இடம்பெயர்ந்து வாழும் அவர்களை திருமலை மாவட்டத்தில் மீளக்குடியமர வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. எதிர்வரும் மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் மீளக்குடி யமர்த்த வேண்டும் என்ற இலக்கும் வகுக் கப்பட்டுள்ளதாகத் தெரிவருகின்றது.

இது குறித்த மாநாடு ஒன்று அண்மையில் கிழக்கு மாகாண ஆளுநர் றியர் அட்மிரல் மொகான் விஜயவிக்கிரம தலைமை யில் நடைபெற்றது.

இம்மாநாட்டில் திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களைச் சேர்ந்த உயர் நிர்வாக அதிகாரிகளும், பாதுகாப்பு உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

திருகோணமலை நகர அபிவிருத்தித்திட்டம், புதிதாக அமைக்கப்படவிருக்கும் அனல் மின் நிலையத்திட்டம் என்பனவற்றைக் கருத்தில் கொண்டு இடம்பெயர்ந்தோரை மீளக்குடியமர்த்தும் பிரதேசங்கள் குறித்து மாநாட்டில் ஆராயப்பட்டது.

திருகோணமலைத் துறைமுகத்தை எதிர்நோக்கி உள்ள கிராமங்களில், கடற்கரையிலிருந்து 500மீற்றர் எல்லை வரையிலும் பிரதான வீதியிலிருந்து 50மீற்றர் எல்லைவரையிலும் மக்களை மீளக்குடியேற்றுவதில்லை என்ற மாநாட்டில்முடிவு செய்யப்பட்டதாக நம்பகமாக அறியப்பட்டது.

இந்த முடிவினால் சுமார் ஆயிரம் தமிழ்க் குடும்பங்கள் தமது சொந்தக்கிராமங்களில் வாழும் வாய்ப்பை இழப்பர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

அபிவிருத்தித் திட்டங்கள் என்ற போர்வையில் தமிழர்களை நகரப்பகுதியில் இருந்து வெளியேற்றும் மறைமுகமான முடிவு இது என்று கருதப்படுகிறது.

(அ)

## மலையகத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டத் தொழிலாளர்கள் குற்றம் சுமத்து கின்றனர் என வாழ்க்கைத்தொழில், தொழில் நுட்பப் பயிற்சிகள் அமைச்சர் பெ.இராதா கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

கடந்தசில வாரங்களாக தோட்டப்புறத் தமிழர்கள் தொடர்ச்சியாக கைது செய்யப்பட்டு வருவது மலையகத்தில் அமைதியற்ற ஒரு நிலைமை உருவாக்க ஏதுவாக அமைந்துவிடும். எனவே தொடர்ந்தும் தமிழ்த் தொழிலாளர்கள் கைதுசெய்யப்படுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கும்படி பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவை நேரடியாகச் சந்தித்துக் கேட்டுக்கொண்டதாக பிரதி அமைச்சர் பிரதி அமைச்சர் இராதா கிருஷ்ணன் மேலும் தெரிவித்தார். (அ-ஐ)

## மகஸின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்க வேண்டும் எனக்கோரி கடந்த ஐந்து தினங்களாக சாகும்வரை உண்ணாவிரதம் மேற் கொண்டுவந்தனர்.

உடன்விடுதலை அல்லது பிணை செல்ல அனுமதிக்கவேண்டும் அல்லது தமது வழக்கை தமது சொந்த இடங்களுக்கு மாற்ற வேண்டும் என்பதே இவர்களது கோரிக்கைகளாகும். உண்ணா விரதம் மேற் கொண்ட அரசியல் கைதிகளை பிரதி அமைச்சர் எம்.இராதா கிருஷ்ணன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிகளான சத்திரநேரு சந்திரகாந்தன், பி.அரியநேத்திரன்ஆகியோர் சென்று பார்வை யிட்டனர்.

(அ-க)

## அனைத்துக் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் கடந்த செயற்குழுக்கூட்டத் தின்போது சர்வ கட்சி மாநாடுகளில் எதிர் வரும் காலங்களில் கலந்துகொள்வதற்கு அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸவிதாரண வால் விடுக்கப்பட்ட அழைப்பு தொடர்பாகஆராயப்பட்டது.

இது தொடர்பாக இறுதித்தீர்மானம் எதனையும் செயற் குழு எடுக்காமல் இந்த விவகாரத்தை கட்சியின் அரசியல் விவ காரக் குழுவிற்கு சமர்ப்பித்து, அதன்படி இவ் விவகாரம் இன்றைய அரசியல் விவகாரக்குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டு இறுதித் தீர்மானம் எடுக்கப் படும்.

(க)

## 41ஆம் நாள் நினைவஞ்சலி

### அமரர் கயித்தாம்பிள்ளை மரியதாஸ்



தோற்றம் 09.11.1936 — மறைவு 18.01.2007

18.01.2007 அன்று இறைவனடி சேர்ந்த கயித்தாம்பிள்ளை மரியதாஸ் அவர்களின் 41ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்தி திருப்பலியும் இன்று (27.02.2007) செவ்வாய்க்கிழமைகாலை 6.30 மணிக்கு மாதகல் புனிததோமையார் ஆலயத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும்அன்புடன் அழைக்கின்றோம்.

வேலுப்பிள்ளைகடையடி,
மாதகல்.

[58450]

தகவல்: அன்ரனிதேவதாஸ்,
அரவிந்தன்.


# CARE INTERNATIONAL SRI LANKA

*CARE International Sri Lanka, one of the world's largest international relief and development organizations working towards economic and social empowerment of poor and marginalised communities is looking for extremely committed individuals who are willing to put in their best to be part of an energetic team of development professionals engaged in the post Tsunami recovery and development programmes in Sri Lanka.*

**VACANCY –JAFFNA**

**1.GENDER COORDINATOR-1 position.**

**Job Summary:**

The Gender Coordinator works across the programs and project components to ensure that the working environment at Jaffna Field Office is conducive to the recruitment and retention of qualified female staff. S/he regularly undertakes assessment of the gender relations throughout the Field Office and will make recommendations to the gender unit at CO through the Project Director/Area Director for improving existing CO systems, policies and procedures. S/he is more particularly responsible for ensuring that the Gender Policy and its operational guidelines are implemented in a timely fashion by all projects and units of the Field Office. The Gender Coordinator networks with organizations involved in gender and development to build linkages and partnerships with like-minded organizations. Finally, s/he listens to women concerns and will handle matters of confidentiality regarding fair treatment, sexual harassment and other matters of gender relations. The incumbent keeps the project management updated on critical gender issues, brings to its knowledge policy issues affecting these areas, recommends appropriate changes on policy, and assists it to implement such changes in a timely fashion. S/he is ultimately responsible for the overall achievement of the mission's mandate on Gender and for operationalizing the Country Office Gender Policy

**Qualification :**

A master's degree in Social Sciences preferably in Women Studies, Law, Sociology, or Psychology. Minimum of five years experience in development, preferably in an NGO. Solid experience on gender, diversity, counseling, training and human resources development is also necessary.

**Suitably qualified candidates should apply with names, addresses, and telephone numbers of three non-related referees on or before 05th of March 2007.. The post applied for should be indicated on the top left-hand corner of the envelope. We thank all applicants, but only the short-listed candidates will be notified**

**WOMEN ARE ENCOURAGED TO APPLY**

**CARE IS AN EQUAL OPPORTUNITY EMPLOYER**

**Humanitarian Assistance Director**
CARE INTERNATIONAL SRI LANKA
No.15 Kandy Road, Jaffna.


## மரண அறிவித்தல்கள்

### திருமதி நல்லநாயகி சண்முகலிங்கம்



நல்லூர், சங்கிலிதோப்பு, அரச வீதியைச் சேர்ந்த திருமதி நல்லநாயகி சண்முகலிங்கம் (மணியன்ரி) 25.02.2007 ஞாயிற்றுக்கிழமை பிரான்சில் காலமானார்.

அன்னார் சண்முகலிங்கத்தின் (முன்னாள் லிகிதர்; யா/செங்குந்த இந்துக் கல்லூரி) அன்பு மனைவியும் கண்ணனின் (பிரான்ஸ்) பாசமிகு தாயும் தர்சினியின் அன்பு மாமியும் மீரன்,மிதுனன், மயூரா ஆகியோரின் அப்பம்மாவுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'மயூரபதி'
46/5, அரச வீதி,
சங்கிலிதோப்பு,யாழ்ப்பாணம். (58463)

தகவல்:
ச.சண்முகரத்தினம்
லோகேஸ்வரி.

### திருமதி அருணாசலம் முத்தம்மா



மீசாலை, மடத்தடியைப் பிறப்பிடமாகவும் கச்சாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருணாசலம் முத்தம்மா 26.02.2007 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் அருணாசலத்தின் அன்பு மனைவியும் அண்ணாமலை(கனடா), அன்னபூரணம்(லண்டன்), பரமேஸ்வரி, மகேஸ்வரி (சுவிஸ்), செல்லையா, கமலேஸ்வரி(கனடா), சிவதாசன் ஆகியோரின் அன்புத் தாயும் நாகராசா (லண்டன்), இராஜலக்சுமி(கனடா), தாமோதரம்பிள்ளை (அமரர்),குகதாசன்(சுவிஸ்), உஷா(அமரர்), ஜெயக்குமார்(கனடா) ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(27.02.2007)செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெற்று.பூதவுடல் கொற்புலவு மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தா.பரமேஸ்வரி (மகள்,
அ.செல்லையா(மகன்),
தா.கேதினி(பேர்த்தி -யா/ கச்சாய் அ.த.க.பாடசாலை ஆசிரியை).

(சி-52105)

### திருமதி புஷ்பலோசினி கருணாகரன்



கோவிற்கடவை, துன்னாலை மத்தி, கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி புஷ்பலோசினி கருணாகரன் 25.02.2007 ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் ஆழ்வாப்பிள்ளை (குமாரசாமி) - காலஞ்சென்ற பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும் கருணாகரனின் மனைவியும் கபிலன் (U.K.), காலஞ்சென்ற நிறஞ்சன், விபுட்ஷன், நிபஜன், கௌதமன், கௌசிகா ஆகியோரின் அன்புத்தாயும் இராமச்சந்திரன், புஷ்பராணி, புஷ்பறஞ்சினி, புஷ்பறீற்றா, இராமசேது ஆகியோரின் அன்புச் சகோதரியும் லீலாவதி, தவரத்தினம், விக்னேஸ்வரராஜா, ஆறுமுகதாஸ், சோபனா ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.02.2007) செவ்வாய்க்கிழமை பி.ப. 3மணிக்கு கோயிற்கடவை இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேரோண்டை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நெடிலி, துன்னாலை மத்தி,
கோவிற்கடவை, கரவெட்டி. (58466)

தகவல்
இ.ஆழ்வாப்பிள்ளை
(தந்தை).

### கந்தையா இரத்தினம் (வயறிங் கிளி)



கற்குள லேன், கொட்டடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இரத்தினம் நேற்று (26.02.2007) திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கற்குள லேன்,
கொட்டடி, யாழ்ப்பாணம். (58461)

தகவல் :
மனைவி, பிள்ளைகள்.

### தேவா சுரேஸ்குமார்

(உரிமையாளர்-சுபா ரவல்ஸ் அன்ட் கொமினிகேசன், கொழும்பு -11, சுபா வேல்ட் ரெக் வே- வெள்ளவத்தை, சுபா இம்பெக்ஸ் கோ-கொழும்பு 11)

யாழ்ப்பாணம், நவாலி வடக்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட தேவா சுரேஸ்குமார் 26.02.2007 திங்கட்கிழமை நண்பகல் காலமானார்.

அன்னார் நவாலிவடக்கு நாகரெட்ணம் தேவா - காலஞ்சென்ற சுலோசனாதேவி தம்பதியரின் அன்பு மகனும் அச்சுவேலி இடைக்காட்டைச் சேர்ந்த ஸ்ரீஸ்கந்தராசா - தெய்வநாயகி தம்பதியரின் மருமகனும் பாமினியின் அன்புக் கணவரும் சுரேஜினி, சந்திரசேகரம் (கணக்காளர்-வவுனியா தெற்கு, பிரதேச செயலகம்), சுபாஜினி சிவகுமார் (கொழும்பு 06), சதீஸ்குமார் (கொழும்பு 06) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பிரகலாதன் (யாழ்.செயலகம்), சா... கன் (மாணவன், யாழ்.பல்கலைக்கழகம்), செ.சந்திரசேகரம் ... வுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்), தே.சிவகுமார் (சுக... திணைக்களம், கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும் ... சாரங்கன் (ஆசிரியை, கொழும்பு), ஐ.சாரங்கன் (உதவிச்செ... r) தேசநிர்மாண அமைச்சு)ஆகியோரின் சகலனும் ச.அட்ச... பி ஷேகன், சி.ஜீவனா ஆகியோரின் ஆசைமாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பி... றி விக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் ... ள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குடும்...

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.02.2... இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org